**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம். நாங்குநேரி**
**முன்னிலை: திருமதி.ச.மஞ்சுளா.பி.ஏ.,எல்.எல்.பி.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, நாங்குநேரி**

**2026 ம் ஆண்டு ஜூன் மாதம் 30 ம் நாள் செவ்வாய்கிழமை**

**<u>அசல் வழக்கு எண்.153/2024</u>**

A.முத்துகுமார் ....வாதி

/எதிர்/

1. இசக்கியப்பன்
2. கணேசன்
3. துரைமுத்து
4. சண்முகவேல்
5. தேவபிரியன்
6. தங்கவேல்
7. பொது மேலாளர்
   திருவாடுதுறை ஆதினம்
   திருவாடுதுறை
8. கண்காணிப்பாளர்
   செந்தில் கட்டளை
   திருவாடுதுறை ஆதினம்
   திருவாடுதுறை .... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது 23.06.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.N.செல்வராஜ்.பி.எஸ்சி.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், 7, 8 ம் பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.த.வேல்முருகன்.எம்.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டும்,

இருதரப்பினர்களின் வாதங்களைக் கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று வரை இந்நீதிமன்ற ஆய்விலிருந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.

## தீர்ப்புரை

**1)** பிராது தபசில் சொத்தினை வாதி அமைதியான முறையில் குத்தகைதாரர் நிலையில் பயிர் செய்து அனுபவம் செய்து வருவதை 1 முதல் 6 பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ அல்லது முகவர்களோ எவ்விதத்திலும் எவ்வித இடையூம் செய்க்கூடாது என நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரியும் மற்றும் இவ்வழக்கு செலவுத் தொகை கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) வாதியின் வழக்குரையின் சுருக்கம் :**

வழக்கு தபசில் மற்றும் இதர சொத்துக்கள் திருவாடுதுறை உள்ள திருவாடுதுறை ஆதினத்திற்கு பாத்தியப்பட்டது என்றும், வழக்கு தபசில் சொத்து மற்றும் வழக்கில் இதர சொத்துக்களை திருவாடுதுறை ஆதினம் வழக்கு 7, 8 பிரதிவாதிகளால் பல்வேறு நபர்களுக்கு குத்தகை பத்திரம் மூலம் குத்தகைக்கு கொடுத்து குத்தகை பணம் பெற்று அனுபவம் செய்து வந்ததாகவும், வழக்கு தபசில் சொத்தை வாதி திருவாடுதுறை ஆதினத்திடமிருந்து 7, 8 பிரதிவாதிகள் மூலம் 02.05.2024 தேதியில் 02.05.2024 முதல் 30.06.2026 வரையுள்ள காலத்திற்கு குத்தகைக்கு பெற்று தனது சொந்த உடல் உழைப்பின் மூலம் பயிர் செய்து அனுபவித்து வந்ததாகவும், வழக்கு வாதி தபசில் சொத்தில் குத்தகைதாரர் நிலையில் பயிர் செய்து அனுபவம் செய்து வருவதாகவும், 01.07.2024 அன்று வாதி தபசில் சொத்தில் வேலை செய்து கொண்டிருந்த போது 1, 5, 6 பிரதிவாதிகள் வாதியை வழக்கு தபசில் சொத்தில் வேலை செய்ய விடாமல் தடுக்க முயற்சி செய்ததாகவும், வாதி

காவல்நிலையத்தில் புகார் கொடுத்து காவல்நிலையத்தில் சர்வேயர் வைத்து அளவீடு செய்யுமாறும் அறிவுரை கூறி அனுப்பிவிட்டதாகவும், பின்னர் வழக்கு 1 முதல் 6 பிரதிவாதிகள் வாதி ஊர் மக்கள் வாங்கிய இடத்தை வாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவரிடம் 08.07.2024 அன்று புகார் மனு கொடுத்ததாகவும், மேற்படி மனுவினை சேரன்மகாதேவி சார் ஆட்சியர் 08.08.2024 அன்று 1 முதல் 6 பிரதிவாதிகள் கொடுத்த புகார் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டதாகவும், இந்நிலையில் வாதி 22.09.2024 அன்று வழக்கு தபசில் சொத்தை சுத்தம் செய்து கொண்டிருந்த போது 1 முதல் 6 பிரதிவாதிகள் வழக்கு தபசில் சொத்தை சுத்தம் செய்ய விடாமல் வாதியை தடுக்க முயற்சி செய்ததாகவும், வாதி காவல்நிலையத்தில் புகார் கொடுத்து, மேற்படி புகாரானது சிவில் பிரச்சனை என்பதால் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளும் படி கூறியதால் வாதியால் இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3) 7, 8ம் பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையின் சுருக்கம்</u> :**

வாதியின் வழக்கு சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல என்றும், எதிர்வழக்குரையில் வியக்கத்தமாய் ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர பிராதில் கண்ட ஏனைய சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பானவை என்றும், வாதிகள் கூறியுள்ள காரணங்களை மறுத்தும், வழக்கு தபசில் சொத்து மற்றும் வழக்கில் இல்லாத பிற சொத்துக்கள் 7, 8 பிரதிவாதிகளின் திருவாடுதுறை மடத்திற்கு பாத்தியப்பட்டது என்றும், வழக்கு சொத்தினை வாதிக்கும், வழக்கில் இல்லாத பிற சொத்துக்ளை பல்வேறு நபர்களுக்கு திருவாடுதுறை மடத்தினால் குத்தகைக்கு கொடுக்கப்பட்டதாகவும், வாதிக்கு வழக்கு சொத்தினை திருவாடுதுறை மடம் 02.05.2024 தேதியில் 02.05.2024 முத் 30.06.2026 வரையுள்ள காலத்திற்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டதாகவும், அதன் அடிப்படையில் 02.05.2024 முதல் 30.06.2024 வரையுள்ள காலத்திற்கு வழக்கு வாதி, திருவாடுதுறை மடத்தின்

குத்தகைதாரர் என்றும், தபசில் சொத்தினை பொறுத்து திருவாடுதுறை ஆதினத்தின் குத்தகைதாரர் நிலையில் வாதியை தவிர வேறு எவருக்கும் தபசில் சொத்தில் எவ்வித உரிமையும் அனுபவமும், கிடையாது என்றும், தபசில் சொத்தினை வாதி திருவாடுதுறை மடத்தின் குத்தகைதாரர் நிலையில் அனுபவம் செய்து வருவதை இடைஞ்சல் செய்ய 1 முதல் 6 பிரதிவாதிகளுக்கோ அல்லது வேறு எவருக்கும் எவ்வித உரிமையும் கிடையாது என்றும், எனவே வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**4)** வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் இந்நீதிமன்றம் கீழ்கண்ட எழுவினாக்களைது வனைந்துள்ளது.

**வழக்கெழு வினாக்கள்**

1) Whether the plaintiff is in lawful possession of the suit schedule property?

2) Whether the plaintiff is entitled to the relief of permanent injunction as prayed for?

3) To what other reliefs?

5) வாதி தரப்பில், வாதி முத்துகுமார் என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் இல்லை.

6) **இருபக்கவாதுரை**

வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித வாதுரையும் இல்லை.

**7) தீர்வு**

எழுவினாக்கள் 1 மற்றும் 2 வரை ஒன்றுக்கொன்று தொடர்புடையவைகளாக உள்ள நிலையில் அவை ஒரு சேர பரிசீலனைக்கு எடுக்கப்படுகிறது.

**<u>8) எழுவினா 1 மற்றும் 2 க்கான பரிசீலனையும் அதன் முடிவும்</u>:**

வாதி குத்தகைதாரர் நிலையில் அமைதியாக தபசில் சொத்தை அனுபவம் செய்து வருவதை 1 முதல் 6 பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்யக்கூடாதென நிரந்தஉறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 7, 8 பிரதிவாதிகளுக்கு எதிராக எவ்வித பரிகாரங்களும் வழக்கில் கோரப்படவில்லை. வாதி திருவாடுதுறை ஆதினத்திற்கு பாத்தியப்பட்ட வழக்கு சொத்தை 02.05.2024 முதல் 30.06.2026 வரையிலான காலத்திற்கு குத்தகை ஆவணம் வா.சா.ஆ.1 ன் படி குத்தகை பெற்று குத்தகை பணம் செலுத்தியுள்ளது வா.சா.ஆ.2 ஆவணமும் தாக்கல் செய்யப்பட்டுள்ள 7, 8 பிரதிவாதிகள் வழக்கு சொத்து திருவாடுதுறை ஆதீனத்திற்கு பாத்தியப்பட்டது என்றும் வாதிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளனர். வாதி முறையாக குத்தகைக்கு பெற்று அனுபவம் செய்து வருவது தெளிவாக தெரிகிறது.

9) அதேபோல் வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.5 ஆன புகார் மனு ஏற்பு ரசீது, சேரன்மகாதேவி சார் ஆட்சியர் வழங்கிய உத்தரவு, ஏர்வாடி காவல்நிலையத்தில் வாதி கொடுத்த புகார் மனு ஆகிய ஆவணங்களின் மூலம் வாதிக்கும் 1 முதல் 6 பிரதிவாதிக்கும் இடையில் பிரச்சனை இருந்துள்ளது புலப்படுகிறது வாதி தரப்பில் குத்தகைக்கு பெற்று அனுபவம் செய்து வருவதும் மற்றும் 1 முதல் 6 பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்ததும் நிருபணமாகியுள்ளதால் வழக்கு தபசில் சொத்தினை வாதி அமைதியான முறையில் குத்தகைதாரர் நிலையில் பயிர் செய்து அனுபவம் செய்து வருவதை 1 முதல் 6 பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ அல்லது முகவர்களோ எவ்விதத்திலும் எவ்வித இடையூம் செய்க்கூடாது என வாதி கோரியுள்ள நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரமானது வாதிக்கு கிடைக்கக்கூடியது என்று எழுவினா 1, 2 ற்கு வாதிக்கு ஆதரவாக விடைகாணப்படுகிறது.

**<u>10) எழுவினா 3 க்கான பரிசீலனையும் அதன் முடிவும்</u>:**

வாதிக்கு கிடைக்கக்கூடிய வேறு இதர பரிகாரங்கள் உள்ளதா?

வாதியின் வழக்கை கவனமாக பரிசீலிக்கையில் வழக்கு தபசில் சொத்தினை வாதி அமைதியான முறையில் குத்தகைதாரர் நிலையில் பயிர் செய்து அனுபவம் செய்து வருவதை 1 முதல் 6 பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ அல்லது முகவர்களோ எவ்விதத்திலும் எவ்வித இடையூம் செய்க்கூடாது என நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு வழங்கத்தக்கது என முடிவு காணப்பட்டுள்ள நிலையில் வாதிக்கு வேறு பரிகாரம் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்றும் வழக்கு செலவுத்தொகை இல்லை எனவும் முடிவுகண்டு இந்த எழுவினாவிற்கு விடையளிக்கப்படுகிறது.

**11) அ) முடிவாக, வழக்கு அனுமதிக்கப்பட்டு, வழக்கு தபசில் சொத்தினை வாதி அமைதியான முறையில் குத்தகைதாரர் நிலையில் பயிர் செய்து அனுபவம் செய்து வருவதை 1 முதல் 6 பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ அல்லது முகவர்களோ எவ்விதத்திலும் எவ்வித இடையூம் செய்க்கூடாது என வாதி கோரியுள்ள நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**ஆ) செலவுத்தொகை இல்லை என உத்தரவிடப்படுகிறது.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு. பின்னர் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு. 2026ம் ஆண்டு ஜுன் திங்கள் 30ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

MANJULA C

Digitally signed by MANJULA C
Date: 2026.07.02 17:27:28 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**நாங்குநேரி**

**விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் பட்டியல்:**
**வாதி தரப்பில்;**

வா.சா.1 : முத்துகுமார்

**பிரதிவாதிகள் தரப்பில் - இல்லை**

**குறியிடப்பட்ட சான்றாவணங்களின் பட்டியல்**

**வாதி தரப்பில்**

| Doc.No. | Date | Particulars of the documents |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 02.05.2024 முதல் 30.06.2026 | வாதியின் பெயரில் உள்ள குத்தகை பத்திரம் |
| வா.சா.ஆ.2 | 26.06.2024 | வாதி செலுத்திய குத்தகை பணத்திற்கான ரசீது எண்ணம் 1 அசல் |
| வா.சா.ஆ.3 | - | புகார் மனு ஏற்பு ரசீது |
| வா.சா.ஆ.4 | 08.08.2024 | சேரன்மகாதேவி சார் ஆட்சியர் வழங்கிய உத்தரவு அசல் |
| வா.சா.ஆ.5 | 22.09.2024 | ஏர்வாடி காவல்நிலையத்தில் வாதி கொடுத்த புகார் மனு கைநகல் |

**பிரதிவாதிகள் தரப்பில் - இல்லை**

**சாட்சி தரப்பு சான்றாவணம்: இல்லை**

MANJULA C

Digitally signed by MANJULA C
Date: 2026.07.02 17:27:33 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**நாங்குநேரி**